உம்முடைய சிலுவையையும் திருமரணத்தையும் பார்த்து
என் பாவத்தைப் பொறுஞ் சுவாமி!
என் பாவத்தைப் பொறும்

உம்முடைய சர்வாங்க காயங்களையும் திருவுதிரத்தையும் பார்த்து
என் பாவத்தைப் பொறுஞ் சுவாமி!
என் பாவத்தைப் பொறும்

சர்வ தயாபர இயேசுவே,
பாவிகளாயிருக்கிற எங்கள் பேரில்
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும் (3)

பாடல்:

இதுவரை செய்த செயல்களுக்காக
இறைவா உமக்கு நன்றி

உவர் நிலமாக இருந்த என்னை
விளை நிலமாக மாற்றிய உம்மை - 2
அலைகடல் அலைந்து ஓய்கின்ற வரையில் - 2
நாவினால் புகழ்ந்து பாடுவேன் நன்றி - 2

தனிமரமாக வளர்ந்த என்னை
பழமரமாக சிறப்பித்த உம்மை - 2
திசைகளும் கோள்களும் அசைகின்ற வரையில் - 2
இன்னிசை முழங்கியே பாடுவேன் நன்றி - 2



மூலம்: மோட்சபாதை

# பெரிய வியாளன்
# திவ்விய நற்கருணை ஆராதனை



திவ்விய நற்கருணை ஆராதனைச் செபம்:

என் ஆண்டவராகிய இயேசுவே! தேவரீர் மனுமக்கள்மேல் வைத்த அன்பின் மிகுதியால் தேவநற்கருணையிலே எழுந்தருளி, இரவும் பகலும் அவர்களுக்காகக் காத்துக்கொண்டு இந்தப் பீடத்தில் வாசம்பண்ணி, அவர்களைத் தேவரீரிடத்தில் அழைக்கவும், தேவரீரைச் சந்திக்க வருகிற எல்லோரையும் தயவோடு ஏற்றுக்கொள்ளவும் கிருபை கூர்ந்துள்ளீரே!

சுவாமி! ஆராதனைக்குரிய இந்த திருவருட்சாதனத்திலே தேவரீர் மெய்யாகவே எழுந்தருளியிருக்கிறீரென்று நான் உறுதியாக விசுவசிக்கிறேன்.

அற்பனாகிய நான் தேவரீரை ஆராதித்து, தேவரீர் அடியேனுக்கு செய்தருளிய சகல உபகாரங்களுக்காகவும், விசேஷமாய்த் தேவரீர் இந்தத் திருவருட்சாதனத்தில் உம்மையே எனக்குப் போசனமாய்த் தந்து உம்முடைய திருத்தாயாராகிய புனித கன்னிமரியம்மாளை எனக்கோர் அடைக்கலமாக ஏற்படுத்தி, இந்தத் தேவாலயத்திலே உம்மை சந்திக்க வரும்படி அடியேனைத் தேவரீர் அழைத்துக் கொண்டதற்காகவும், தேவரீருக்கு நன்றியறிந்த தோத்திரம் செலுத்துகிறேன், ஆமென்.

பாடல்:

அன்பின் தேவ நற்கருணையிலே
அழியாப் புகழுடன் வாழ்பவரே
அன்புப் பாதையிலே வழி நடந்து
அடியோர் வாழ்ந்திட துணை செய்வீர்

அற்புதமாக எமைப் படைத்தீர்
தற்பரன் நீரே எமை மீட்டீர்
பொற்புடன் அப்பரசக் குணத்தில்
எப்பொழுதும் வாழ் இறைவனானீர்
எத்தனை வழிகளில் உமதன்பை
எண்பித்தெமை நீர் ஆட்கொண்டீர்

கல்வாரி மலையில் சிகரமதில்
கனிவுடன் தினம் எமை நிலை நிறுத்தும்
நற்கருணை விசுவாசமதில்
நம்பிக்கையூட்டி வளர்த்திடுவீர்
இளமையின் பொலிவால் திகழ் திருச்சபையும்
யாவரும் வாழத் தயை புரிவீர்

## இயேசுக்கிறிஸ்து சிலுவையிலிருந்து அருளிய ஏழு திருவுரைகளின் தியானம்

அத்தியந்த தயவோடு அடியோரை மீட்டிரட்சித்த அமிர்தமான இயேசுவே! தேவரீர் நீசமனிதனாய் மரணத்தைக் கையேற்று உமது ஈறாந்த நாளிற் சிலுவைமரத்தில் அரிய வேதனை விதனம் அனுபவித்திருந்த போதிலும், அடியோர்கள் பேரில் மனமிரங்கி அனவரத காலம் நாங்கள் உம்மைச் சிந்தித்து, உமது பாடுகளைத் தியானித்திருக்க வேணுமென்ற காரணமாய் அமிர்தமான ஏழு வசனங்களை அருளிச் செய்தீரே.

அந்த திருவாக்கியங்களில் அடங்கிய சகல நன்மைகளையும் தேவரீர் உத்தேசித்து, இதுவரையும் உமக்கு விரோதமான அகந்தை, அபேட்சை, மோகம், கோபம், உலோபம், காய்மகாரம், சோம்பல் என்னும் ஏழு மூல துர்க்குணங்களின் கண்ணியில் அகப்பட்டுப் பிசாசுக்கு அடிமையாய் இருக்கிற எங்கள் பேரில் தேவரீர் கிருபை கூர்ந்து, எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம், ஆமென்.



திருமுகமலர்வு மடித்து
திருவிழிகள் மறைந்து
திருத்தலை கவிழ்ந்து மரணித்த
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

எனக்காக வித்தனை பாடுகளைப் பட்டீரே
என்பாவ முத்தரிக்கவு மதுதிரஞ் சிந்தினீரே
எனதாத்துமத்துக்காக உமதாத்துமத்தை கொடுத்த
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

இந்த நன்றிகளையெல்லாம் மடியேன் பாராமல்
எனக்காகப் பாடுபட்டதையும் மெண்ணாமல்
மகா துஷ்ட துரோகத்தை செய்தேனே
என் பாவத்தைப் பொறுஞ் சுவாமி!
என் பாவத்தைப் பொறும்

இதோவென்னிருதயஞ் சகலமுமதிர்ந்து
விதனத்தாற் பொடிப்பொடியாகப் பிளந்து
கண்களால் கண்ணீர் சொரிந்தழுது நிற்கிறேன்
என் பாவத்தைப் பொறுஞ் சுவாமி!
என் பாவத்தைப் பொறும்

என்பாவத்தி னதிகத்தையுங் கொடுமையும் பாராமல்
என் பாவத்தைப் பொறுஞ் சுவாமி!
என் பாவத்தைப் பொறும்

உம்முடைய கிருபையையும் மகிமையின் மிகுதியையும் பார்த்து
என் பாவத்தைப் பொறுஞ் சுவாமி!
என் பாவத்தைப் பொறும்

உம்முடைய கசையடிகளையும் முள்முடியையும் பார்த்து
என் பாவத்தைப் பொறுஞ் சுவாமி!
என் பாவத்தைப் பொறும்

திருச்சிரசில் முள்முடி தரித்து
பீற்றற் சகலாத்தை மேலிற் போர்த்து
பரிகாச ராசனாக நிந்திக்கப்பட்ட
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

பாரதூரச் சிலுவை தோளிற் சுமந்து
கபாலமலைமட்டும் தொய்வோடே நடந்து
பெலவீனமாகத் தரையிலே விழுந்த
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

திருத்துகிலைக் கடூரமாயுரிந்து
சர்வாங்க காயங்கள் விரிவாய் மிகுந்து
சபைமுன்பாக நாணித்து வாதிக்கப்பட்ட
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

சிலுவை மரத்தின் மீதே சயனித்து
திருப்பாதகரங்களி லாணிகளறைந்து
இரு கள்வருக்கு நடுவே நிறுத்தப்பட்ட
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

சிலுவையிலேறிச் சுகிர்தம் மொழிந்து
வாதிக்கிற சத்துராதிகளுக்குப் பாவம்பொறுத்து
அனைவருக்கும் தயவுகாண்பித்த
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

சகல வாதைகளையுந் தீரவனுபவித்து
பாவிக ளீடேற்றம் முகிய முகித்து
சீவபலியாகப் பிராணனைக் கொடுத்த
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்



1. கருணைச் சமுத்திரமான எனது யேசுவே! தேவரீர் உமது சத்துருக்களுக்காகப் பிதாவை பிரார்த்தித்து «தந்தையே, அவர்களை மன்னியும், ஏனெனில் தாங்கள் செய்கிறது இன்னதென்று அவர்களுக்குத் தெரியவில்லை» என்று திருவிளம் பற்றினீரே. அப்படியே எங்களுக்கும் உமது அனுக்கிரகம் புரிந்து பரதேசிகளான நாங்கள் இவ்வுலகத்திற் சீவிக்குமளவும் புறத்தியார் எங்களுக்குச் செய்கிற பிழைகளை உமது நேசத்துக்காக நல்ல மனதோடு பொறுக்க எங்களுக்கு உதவி அருள் தந்தருள உம்மையே மன்றாடுகிறோம் ஆமென். பரலோகத்தில் இருக்கிற..

2. சகல தயவு நிறைந்த என் கத்தரே! தேவரீர் உமது வலப்பக்கத்துக் கள்ளனைப் பார்த்து «இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய்» என்று உமது அளவற்ற வல்லமையினாலும் தயவினாலும் திருவுளம் பற்றினீரே. அப்படியே எங்களுக்கும் உமது அனுக்கிரகம் புரிந்து எங்கள் மரணத்தருவாயில் எங்கள் ஆத்துமத்தை தேவரீர் நோக்கி «இன்றே என்னோடு வான்வீட்டில் இருப்பாயாக» என்னும் அமிர்த வசனத்தை உம்முடைய திருவாயினால் கேட்கவும் அத்தால் நித்திய பாக்கியம் அடையவும் அனுக்கிரகம் பண்ணியருளும் ஆமென். பரலோகத்தில் இருக்கிற..

3. எனது அன்பான யேசுவே! தேவரீர் பரிசுத்த கன்னியான உமது மாதாவைப் பார்த்து, யுவானியாரைக் காண்பித்து «அம்மா! இதோ உன் மகன்» என்றும், யுவானியாரை நோக்கி மாதாவைக் காண்பித்து «இதோ உனது தாய்» என்றும், திருவுளம் பற்றினீரே. அப்படியே அந்த மோட்ச சம்பன்ன கன்னிமரியாயின் கரங்களிலே உம்மால் நாங்களும் ஒப்புக் கொடுக்கப் பட்டவர்களாகி அந்தத் திவ்விய நாயகியின் ஞானப் புத்திரராய்ச் சுவீகரிக்கப்பட்டு அவர் சலுகையால் நாங்கள் மோட்ச பாக்கியத்தை அடையப் பண்ணியருளும் ஆமென். பரலோகத்தில் இருக்கிற..

4. என் கர்த்தாவான தேவனே! தேவரீர் உம்முடைய திவ்விய பிதாவைப் பார்த்து, «என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்» என்று திருவுளம் பற்றினீரே. எனது அன்பான யேசுவே! எங்களுக்கு உமது அனுக்கிரகம் புரிந்து, எங்களுடைய ஆபத்து அவசரங்களிலும் வேதனை விதனங்களிலும், எங்கள் ஆத்தும நேத்திரங்களாகிய புத்தி, மனம், சித்தமெனும் மூன்று சக்திகளையும் முழு இருதயத்துடன் உயர்த்தி, எங்கள் பிதாவே! எங்கள் கர்த்தாவான சர்வேசுரா எங்களுக்கு இந்த அவசரங்களில் உதவி செய்யும் எங்களை கைவிடாதேயும் என்று, உறுதியான விசுவாச நம்பிக்கையோடே வேண்டிக்கொள்ள நீர் எங்களுக்காகச் சிந்தின விலைமதியாத திருவுதிரத்தைப் பார்த்துக் கிருபை பண்ணியருளும் ஆமென். பரலோகத்தில் இருக்கிற..

5. எனது தயாபர சருவேசுரா! தேவரீர் «தாகமாயிருக்கிறது» என்று திருவுளம் பற்றி, எங்கள் ஆத்துமம் ஆரோக்கியத்தை அடைய உமது இருதயத்திற் பதிந்திருந்த அக்கினியையும், அதனால் எழும்பின தாகத்தையும் பிரதியட்டசமாகக் காண்பிக்கச் சித்தமானீரே. அப்படியே வற்றாத பத்தியின் நித்திய நன்மை வழிந்து பாய்கிற, அமிர்த சாகரமாயிருக்கிற உமது பேரிலே சதாகாலமும் அடியோரும், ஒரே தாகமாயிருக்க எங்களுக்கு உதவி அருளைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம் ஆமென். பரலோகத்தில் இருக்கிற..

6. சகல நன்மைச் சுருபியான தேவனே! «எல்லாம் நிறைவேறிற்று» என்று கூறி தேவரீர் எங்களுக்காகக் கையேற்கச் சித்தமாயிருந்த வாதை, வேதனை, நிந்தை நிர்ப்பந்தங்களெல்லாம் சம்பூரணமானதென்று வெளிப்படுத்தத் திருவுளமானீரே. அப்படியே எங்கள் மரணத் தறுவாயில் தேவரீர் எங்கள் ஆத்துமத்தைப் பார்த்து «எனது அருளால் நிரம்பி என்னால் நேசிக்கப்பட்ட ஆத்துமங்களே, உங்கள் வருத்த வேதனைகளில், நாட்கள் எல்லாம் முடிந்ததால் நம்மோடும் சகல புனிதர்களோடும் நித்திய ஆனந்த சந்தோஷ அகமகிழ்ச்சியான இளைப்பாறுதலை அடைய, அனாதியாய் உங்களுக்கு ஆயத்தம் பண்ணியிருக்கிற மோட்ச சம்பாவனைக்கு வருவீர்களாக» என்று தேவரீர் எங்களை அன்போடு அழைக்கும் அமிர்த தொனியைக் கேட்க அடிடீயோருக்குக் கிருபை பண்ணியருளும் ஆமென். பரலோகத்தில் இருக்கிற..

7. சுயஞ்சீவிய சருவேசுரனுடைய திருக்குமாரனாகிய இயேசுவே! «தந்தையே உமது கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்» என்று திருவுளம் பற்றினீரே. அப்படியே நானும் என்னாத்துமமும் இவ்வுலகத்தை விட்டுப் பிரிகிற நேரத்திலே «என் மதுர இயேசுவே என் சத்துருக்களிடத்தில் நின்று என்னை இரட்சித்து, என் ஆத்துமத்தை நீர் கையேற்றருளும்» என்று உம்மை வேண்டிக் கொள்கிறபோது, என் பாவங்களைப் பாராமல் உமது இரக்கத்தைப் பார்த்து, அடியேனுக்கு கிருபை பண்ணியருளும் ஆமேன். பரலோகத்தில் இருக்கிற..

செபம்:

என் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்துவே! தேவரீர் சிலுவையிலே அனுபவித்த எண்ணற்ற வியாகுலத்தையும், உமது திவ்விய ஆத்துமம் திருச்சரீரத்தை விட்டுப்பிரியும்போது அதின் பேரிலே இரக்கமாயிருக்கும்படி உம்மையே வேண்டிக் கொள்கிறேன், ஆமென்.



பிழை தீர்க்கின்ற செபம்:

சர்வ தயாபர இயேசுவே,
பாவிகளாயிருக்கிற எங்கள் பேரில்
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

மண்ணால் மனுஷனை உண்டாக்கி
திவ்விய கருணையால் வல்லவனாக்கி
அவன் கையால் பாடுபட திருவுளமான
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

துஷ்டயூதர் கையிற் சிறைப்பட்டு
திருக்கண்டத்தில் கரத்திற் கயிறிட்டு
செம்மறிபோலப் பலிக்கேகப்பட்ட
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

அந்நீத குருச்சபையிலமைந்து
பொய்ச் சாட்சிகளுக்குப் பணிந்து
தேவ பழிகாரனாகக் கூறப்பட்ட
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

திருக் கன்னத்திலறையுண்டு
திருவிழிகள் மறைக்கப்பட்டு
இராமுழுதுங் கோறணிவாதைக ளனுபவித்த
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்

பிலாத்திட்ட துஷ்ட தீர்வையாற் கற்றூணிற் கட்டுண்டு
நிஷ்டூரமா யையாயிரத்துக்கு மதிக மடிபட்டு
சர்வாங்கமு மிரத்தவாறாக்கப்பட்ட
என் தயாபர இயேசுவே
தயவாயிருஞ் சுவாமி தயவாயிரும்